SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

## SECOND EXAMINATIONS IN BACHILOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2011/2012

HELD IN JUNE/ JULY 2013

### BCOM 26 – International Environmental of Business

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) பின்வரும் தரவுகளின் அடிப்படையில் சர்வதேச வர்த்தகம் பற்றிய முழுநயக் கோட்பாட்டின் படி எவ்வாறு நாடுகள் உற்பத்தி, நுகர்வு அதிகரித்து சிறப்புத் தேர்ச்சியடையும் என்பதனை நிருபிக்குக.

- அமெரிக்கா, இலங்கை ஆகிய இரு நாட்டிலும் தலா 100 அலகுகள் ஊழியம் (உற்பத்திக் காரணி) இருப்பதாகக் கருதிக் கொள்க.
- ஓர் அலகு ஊழியத்தினை பயன்படுத்துவதன் மூலமாக அமெரிக்காவில் 100 புசல் கோதுமையினை அல்லது 60 டசின் துணியை உற்பத்தி செய்ய முடியும் எனக் கருதிக் கொள்க.
- இலங்கையில் ஓர் அலகு ஊழியத்தினைப் பயன்படுத்தி 50 புசல் கோதுமையினை அல்லது 100 டசின் துணியை உற்பத்தி செய்யலாம் எனவும் கருதிக் கொள்க.
- சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர் இரு நாடுகளும் இரு பொருள் உற்பத்தியிலும் (கோதுமை, துணி) சமமாக உற்பத்திக் காரணியை பயன்படுத்துகின்றன என எடுகோள் கொள்க.
- சர்வதேச வர்த்தகத்தின் பின்னர் இரு நாட்டிலும் உற்பத்திக் காரணி மறு பங்கீடு செய்யப்படுகின்றன.

(10 புள்ளிகள்)

ஆ) வரைபடங்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை விளக்குக.

i) சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர் நாடொன்றில் X, Y பொருள் தொடர்பாக உற்பத்தி, நுகர்வு, உள்நாட்டு விலைகள் என்பவற்றினை விளக்குக.
(03 புள்ளிகள்)

ii) "மேற்குறிப்பிட்ட நாடு வெளிநாட்டு வர்த்தகத்திற்கு திறந்து விடப்படுகின்ற போது சர்வதேச மாற்று வீதத்தினால் உள்நாட்டு உற்பத்தி வழிப்படுத்தப்படுகிறது. தொடர்புடைய நாடு எதனை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் என்பது உலக சந்தையிலான புதிய விலை விகிதத்தின் மீது தங்கியிருக்கும்". விளக்குக.
(07 புள்ளிகள்)

02. அ) 'ஹெக்சர் – ஒலின் கோட்பாடானது காரணி அளிப்புகளின், அடிப்படையில் ஒப்பீட்டு தன்மையினை விளக்குகின்றது'. கீழுள்ள வரைபடமானது சர்வதேச வர்த்தகத்தின் மூலமான நன்மையினையும் சிறப்புத் தேர்ச்சியினையும் விளக்குகின்றது.




i) மேலுள்ள வரைபடத்தினைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

- * P, Q  * N – T
- * R, T  * N – E
- * JK  * R – M
- * $IC_1$ and $IC_2$  * M - E

(04 புள்ளிகள்)

ii) இவ்வர்த்தக மாதிரியின் பின்னணியுள்ள எடுகோள்களின் மீது மெய்யுலக நிலமைகளுக்கான பொருத்தப்பாடு குறித்து நுணுக்கமாக கருத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) இலங்கையானது X பொருளில் ஒப்பீட்டு நன்மையினை கொண்டுள்ளன. இந்நாடு B நாட்டிலிருந்து Y பொருளை இறக்குமதி செய்வதாகக் கொள்க. ஆரம்பத்தில் இலங்கையானது B நாட்டுடன் வர்த்தகம் செய்கின்றது. ஆனால் இலங்கையின் உற்பத்தியாளர்கள் சர்வதேச விலையை கருத்திற் கொள்ளாத நிலையில் ஏற்படும் நுகர்வு விளைவையும், தற்போது இலங்கையின் உற்பத்தியாளர்கள் சர்வதேச விலையை ஏற்றுக் கொள்வதனால் ஏற்படும் உற்பத்தி விளைவையும் ஒரே வரைபில் காட்டுக.

(06 புள்ளிகள்)

02. அ) 'ஹெக்சர் – ஒலின் கோட்பாடானது காரணி அளிப்புகளின், அடிப்படையில் ஒப்பீட்டு தன்மையினை விளக்குகின்றது'. கீழுள்ள வரைபடமானது சர்வதேச வர்த்தகத்தின் மூலமான நன்மையினையும் சிறப்புத் தேர்ச்சியினையும் விளக்குகின்றது.




i) மேலுள்ள வரைபடத்தினைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

| | |
|---|---|
| * P, Q | * N – T |
| * R, T | * N – E |
| * JK | * R – M |
| * $IC_1$ and $IC_2$ | * M - E |

(04 புள்ளிகள்)

ii) இவ்வர்த்தக மாதிரியின் பின்னணியுள்ள எடுகோள்களின் மீது மெய்யுலக நிலமைகளுக்கான பொருத்தப்பாடு குறித்து நுணுக்கமாக கருத்துரைக்குக.
(10 புள்ளிகள்)

ஆ) இலங்கையானது X பொருளில் ஒப்பீட்டு நன்மையினை கொண்டுள்ளன. இந்நாடு B நாட்டிலிருந்து Y பொருளை இறக்குமதி செய்வதாகக் கொள்க. ஆரம்பத்தில் இலங்கையானது B நாட்டுடன் வர்த்தகம் செய்கின்றது. ஆனால் இலங்கையின் உற்பத்தியாளர்கள் சர்வதேச விலையை கருத்திற் கொள்ளாத நிலையில் ஏற்படும் நுகர்வு விளைவையும், தற்போது இலங்கையின் உற்பத்தியாளர்கள் சர்வதேச விலையை ஏற்றுக் கொள்வதனால் ஏற்படும் உற்பத்தி விளைவையும் ஒரே வரைபில் காட்டுக.

(06 புள்ளிகள்)

03. அ) "தடையற்ற வர்த்தகமானது நாடுகளுக்கிடையே காரணி விலைகளைச் சார்பு ரீதியாகவும் முழுமையாகவும் சமப்படுத்துவதாகவும், இது சர்வதேச ரீதியான காரணி அசைவுக்கு ஒரு பதிலீடாக அமைகின்றது எனவும் காரணி விலைச் சமப்படுத்தல் தேற்றம் தெரிவிக்கின்றது". பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) "ஆரம்பத்தில் ஒரு பொருளை எந்த நாடு ஏற்றுமதி செய்கின்றதோ அந்த நாடே இறுதிவரை தேறிய ஏற்றுமதியாளராக இருப்பதில்லை". சர்வதேச வர்த்தகம் பற்றிய உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்ட கோட்பாட்டினை பயன்படுத்தி இக்கூற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

04 "உலகமயமாக்கம் அது நம்பப்பட்டது போல் அதிகளவு நன்மைகளினை வளர்முக நாடுகள் மீது எடுத்து வரவில்லை". மேற்படி கூற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

அ) தடையற்ற வர்த்தகத்தினால் ஏற்படும் நன்மைகள்

ஆ) உலக வர்த்தக தாபனத்தின் "டோகா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்"

இ) பல்தேசிய கம்பனிகள் (MNCs)

ஈ) தொழில் நுட்ப வர்த்தக இடைவெளி

(05 x 04 = 20 புள்ளிகள்)

* * *